செ. கு. எண்: 119 நாள்: 15.07.2020

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 15.7.2020**

---

“மாலைத் தமிழகம்” நாளிதழில் செய்தியாளராக பணியாற்றி வந்த திரு.பெ.ராஜன் அவர்கள் நேற்று (14.7.2020) மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

மக்களுக்கும், அரசுக்கும் இடையில் இணைப்பு பாலமாக இருந்து வரும் பத்திரிகை துறையில் செய்தியாளராக தனது வாழ்க்கையை தொடங்கி, ‘டாக்டர் நமது எம்.ஜி.ஆர்.,’ “மக்கள் குரல்” உள்ளிட்ட பல்வேறு நாளிதழ்களில் சுமார் 20 ஆண்டு காலமாக பணியாற்றியவர் திரு. ராஜன் அவர்கள்.

திரு. ராஜன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், பத்திரிகை துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

பணிக்காலத்தில் இயற்கை எய்தும் பத்திரிகையாளர்களின் குடும்ப நலனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்படும் குடும்ப உதவி நிதி, மறைந்த செய்தியாளர் திரு. ராஜன் அவர்கள் குடும்பத்தினருக்கு, அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு வழங்கப்படும்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**